பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 07 சனிக்கிழமை 21.01.2023 கதிர் 327

## மார்ச் 9 தேர்தல்

**வெளிவந்தது அறிவிப்பு**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2

# யாழ். நகர சபை முதல்வராக மீண்டும் ஆனல்ட் பதவியேற்பு



யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வராக இம்மானுவல் ஆனல்ட் மீண்டும் இன்று காலை பதவியேற்றுக்கொண்டார்.

முன்னதாக அவர் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் இது தொடர்பான அறிவிப்பை இன்று காலை வர்த்தமானி மூலம் விடுத்தார்.

2

## இரத்த வெள்ளத்தில் ஆணின் சடலம் மீட்பு

**கொழும்பில் பரபரப்பு**

கொழும்பில் இரத்த வெள்ளத்தில் ஆணின் சடலம் ஒன்று இன்று மீட்கப்பட்டுள்ளது.

கல்கிஸை – பொச்சிவத்தயிலுள்ள வீடொன்றிலிருந்து குறித்தசடலம்மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

119 என்ற பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சடலம் மீட்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடையைச் சேர்ந்த 38 வயதான நபரே உயிரிழந்துள்ளார். பஸ் சாரதியாகச் சேவை யாற்றிய குறித்த நபர், தான் தங்கியிருந்த வாடகை வீட்டில் வீழ்ந்து கிடக்கின்றார் என்று அவருடன் தங்கியிருந்த ஒருவரால் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இரத்த வெள்ளத்தில் நிர்வாணமாக குறித்த சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## ஆனல்ட்டின் தெரிவை எதிர்த்து சட்ட உதவியை நாடுவார் மணி

**இன்று அவரே தெரிவிப்பு**




யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயர் தெரிவு சட்டவிரோதமாக இடம்பெற்றிருப்பதால் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுஉட்படஅனைத்து சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளவுள்ளோம்.

– இவ்வாறு யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்தமிழ்மக்கள்கூட்டணியின் 'மான்' சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்களிலும் வர்த்தமானியிலும் யாழ். மாநகர சபையின் புதிய மேயராக இம்மானுவல் ஆனல்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாநகரசபையின் மேயர் தொடர்பில் ஆரம்பம் தொட்டு சட்டவிரோத செயல்கள் நடைபெறுகின்றன.

திட்டமிட்ட நோக்கத்துடன் தங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவரை நியமிக்கவேண்டும் என்கின்ற தேவைப்பாட்டின் அடிப்படையில் யாழ். மாநகர மேயர் தெரிவு இடம்பெற்றிருக்கின்றது என நான் நம்புகின்றேன்.

2

## 7 தேர்தல் வேட்புமனுக்கள் முல்லைத்தீவில் நிராகரிப்பு

**தமிழ் அரசின் கரைத்துரைப்பற்றும் பறிபோனது**

யாழ்ப்பாணம், ஜன.21

முல்லைத்தீவுமாவட்டத்திலுள்ளஉள்ளூராட்சி சபைக்களுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 7 நிராகரிக்கப்படும் நிலை இன்று மாலையில் காணப்பட்டது.

மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி சபைகளிற்கும் தாக்கல் செய்யப்பட்ட 35 வேட்பு மனுக்களில் 7 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளன.

5 கட்சிகளினதும் இரு சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் இவற்றில் அடங்கும்.

தமிழ் அரசுக் கட்சியின் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளது.

## யாழ். மாவட்ட 11 சபைகளில் 2 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.21

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு உட்பட்ட 17 சபைகளில் 11 சபைகள் தொடர்பான முடிவுகளை மாவட்ட அரச அதிபர் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார். அதன்படி 2 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய

01. யாழ்ப்பாணம் மாநகர சபையில் 8கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுவும் வேட்புமனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது.

02. பருத்தித்துறை நகர சபையில் 08 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது.

03. சாவகச்சேரி நகர சபையில் 09 கட்சிகளும், 3 சுயேச்சை குழுக்களுமாக 12 வேட்பு மனு அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது.

04. காரைநகர் பிரதேச சபையில் 8 கட்சிகளும் , 1 சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் இங்கே ஐ.ம.சக்தி சார்பில் தாக்கல் செய்த பட்டியலில் உரிய பெண் பிரதிநிதித்துவம் இன்மையால் நிராகரிக்கப்பட்டது.

05 . வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது.

2

## யாழ்.மாநகர.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபைக்குப் புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த 19ஆம் திகதி கூட்டப் பட்டது. 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 24 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். அதனடிப்படையில் கூட்டம் தொடங்கப் பட்டு தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ஆனல்ட்டின் பெயர் முன்மொழியப் பட்டது.

அந்த முன்மொழிவுக்கு ஆட்சேபனை தெரிவித்து நான்கு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். இதனால் கூட்டம் கோரமிழந்துபோனது என்று தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர், முதல்வர் தெரிவுக்கான அடுத்த கூட்டம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றுகூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

கூட்டம் தொடங்கப்பட்டபோது அதனை நடத்துவதற்குத் தேவையான நிறைவெண் (கோரம்) இருந்தது என்பதாலும் முதல்வர் தெரிவு பற்றிய அறிவிப்புச் செய்யப்படுவதற்கான நேரம் வரையில் கூட்டத்தின் நிறைவெண் குறித்து எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேபனை கிளப்பாததாலும் உள்ளூராட்சி ஆணையாளரின் முடிவு தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பான தமது ஆட்சேபனையை கூட்டத்தில் இருந்த 20 உறுப்பினர்களும் எழுத்து மூலமாக வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்ததில் ஆனல்ட் யாழ். மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 66(ஏ) ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2023.01.19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் புதிய முதல்வர் தெரிவு பிரகடனப்படுத்தப்படாது அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. எனினும் யாழ்ப்பாண மாநகர சபையில் 2023.01.19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் இம்மனுவல் ஆனல்ட் யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வராக மேற்குறித்த சட்டத்தின் 66 (ஈ) (5)ஆம் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

இவ்வாறு ஆணையாளர் அந்த வர்த்தமானி அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராகப் பதவி வகித்த ஆனல்ட் இரண்டு தடவைகள் அவரது வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதன் மூலம் பதவி விலக்கப்பட்டவர். (உ)

## மார்ச் 9.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

வேட்புமனுத் தாக்கல் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் திகதியை முடிவு செய்திருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இன்று நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான அவகாசம் நிறைவடைந்த நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது என்று நியூஸ் பஸ்ட் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## ஆனல்டின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சட்டத்தில் சட்டவிதிமுறைகளை மீறி சட்டவிரேதமாக அறிவிப்பு வெளியாகிய பின்னர் மேயர் தெரிவு நடைபெற்றது. உள்ளூராட்சி மன்றத்தின் சுற்றறிக்கை ஒன்றில் இரண்டு முறைகள் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து வெல்ல முடியாது பதவி இழந்த ஒருவர் மீண்டும் பதவிக்குப் போட்டியிடக்கூடாது என்று இருக்கின்றது.

அந்தச் சுற்றறிக்கையை மீறி யாழ். மாநகர சபையின் புதிய மேயராக இம்மானுவேல் ஆனல்ட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதன் பின்னர் உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறியதால் நிறைவெண் காணாது என உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டத்தை ஒத்திவைத்தார். ஆனால், இப்போது மோசடியாக, சட்டவிரோதமாக ஆனல்ட் யாழ். மாநகர சபையின் மேயராக நியமிக்கப்பட்டுள்ளார். இதிலே பெருமளவு இலஞ்ச, ஊழல் இடம்பெற்றிருக்கின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதில் இருந்து அனைத்து விதமான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

இந்தச் சட்டவிரேத செயற்பாடுகள் நடக்கலாம் என்றால் யாழ்ப்பாணத்திலே சட்டங்கள் தேவையில்லை. சட்டப்புத்தகங்களை குப்பையிலே எறிந்துவிட்டு இந்த மேயர் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதிலிருந்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயாராகி வருகின்றோம்.

கடந்த சில வாரங்களாக உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு தயாரிக்கும் வேலைப்பளுவால் சில வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியாத நிலை இருந்தது. தற்போது இந்த வேலைப்பளுக்கள் குறைந்துள்ளன. உடனடியாக நீதிமன்றத்தை நாடி சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## யாழ்.மாவட்ட.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

06. வலி.வடக்கு பிரதேச சபையில் 9 கட்சிகளும் 1 சுயேச்சை குழுவுமாக 10 வேட்புமனுக்கள்தாக்கல்செய்யப்பட்டதில் அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளது.

07. வலி.தென்.மேற்கு பிரதேச சபையில் 8 கட்சிகள் வேற்பு மனுத் தாக்கல் செய்தனர். இங்கும் அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

08. வலி.தெற்கு பிரதேச சபையில் 10 கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் ஒரு வேட்புமனு நிராகரிக்கப்பட்டு 9 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

09. பருத்தித்துறை பிரதேச சபையில் 8 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன.

10.சாவகச்சேரி பிரதேச சபைக்கு 9 கட்சிகளும் , 1 சுயேச்சை குழுவும் தாக்கல் செய்த நிலையில் 10 மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

11. நல்லூர் பிரதேச சபையில் 8 கட்சிகளும் , 1 சுயேச்சை குழுவும் என 9 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் அனைத்தும் ஏற்கப்பட்டதாக கட்சிகளுடனான சந்திப்பில் தெரிவித்தார்.

ஏனைய 6 சபைகளின் முடிவுகள் இதுவரை வெளிவரவில்லை.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கருத்துக் கணிப்பு அவசியம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்திருக்கிறது. அனேகமாக தேர்தல் 9ஆம் திகதி அறிவிக்கப்படக் கூடும் என்றும் தகவல்கள் வெளியாகி இருக் கின்றன.

பொருளாதார நெருக்கடி, அதற்கெதிரான மக்களின் கிளர்ச்சி, அதனால் கோட்டாபய ராஜபக்ச பதவியிலிருந்து ஓட்டம் என்று அடுத்தடுத்து விரிந்த காட்சிகளுக்குப் பின்னர் ஆட்சியாளர்கள் மீதான குறுகிய கருத்துக் கணிப்பாக இந்தத் தேர்தல் கருதப்படுகின்றது.

குறிப்பாக ராஜபக்சக்கள் பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்னர் அவர்கள் தொடர்பில் மக்களின் கருத்தை அறியும் வகையிலும் ராஜ பக்சக்களின் ஆதரவோடு பதவியில் அமர்ந் திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை மக்கள் அங்கீகரிக்கிறார்களா என்கிற மக்கள் கருத்தை அறியவும் இந்தத் தேர்தல் பயன்படும் என்பது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ராஜபக்சக்களுக்கும் ரணிலுக்கும் எதிரான அலை இன்னமும் கனன்று கொண்டே இருப்பதால் இந்தத் தேர்தலில் அதன் பிரதிபலிப்பு ஆட்சியாளர்களுக்குப் பாதகமாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால், அந்த அச்சம் காரணமாகவே தேர்தலைப் பிற்போடுவதற்கு ஆட்சித் தரப்பு முயற்சிக்கின்றது என்கிற குற்றச்சாட்டும் பரவலாக இருக்கின்றது.

முக்கியமாகக் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சிகள் இந்த விடயத்தில் தற்போதைய ஆட்சியாளர்களைக் குற்றவாளிகளாகவே காண்கின்றன. போதிய பணம் இல்லை, தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகும் போன்ற காரணங்களைக் கூறிக்கொண்டு தேர்தலை ஒத்திவைக்க ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றார்கள் என்று எதிரணியினர் கூச்சலிடுகின்றார்கள்.

தெற்கில் எதிரணியினர் இவ்வாறு கூச்சலிட்ட போதும் வடக்கு கிழக்கில் அத்தகைய எதிர்ப்புக்கள் எவையும் எழவில்லை. சொந்த கட்சிக்குள் இருக்கும் இழுபறியிலேயே கருத்தாக இருப்பதாலேயே என்னவோ அரசு என்ன செய்தாலும் பரவாயில்லை என்பதாக இருக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

இத்தகைய நிலையில் அனைத்துத் தரப்பினர் மீதுமான மக்கள் கருத்துக் கணிப்பாக அமையப் போகும் இந்தத் தேர்தலே இனி வரப்போகும் தேர்தல்களுக்கும் கட்டியம் கூறப்போகின்றது. அதனால் அனைத்துத் தரப்புக்களும் தம்மை ஒரு சுய பரிசோதனை செய்துகொள்ளும் வகையில் இந்தத் தேர்தலை நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆட்சியாளர்கள் ஏதாவது தகிடு தத்தம் பண்ணி தேர்தலை நடத்தாமல் பிற்போடுவதற்கு முயன்றால் அதற்கெதிரான நிலைப்பாட்டை எடுத்து மக்களாட்சியைக் காப்பற்ற அனைவரும் முன் வரவேண்டும்.

# அரசியல் கைதிகளை ஜனவரிக்குள் விடுவிக்க சிவாஜிலிங்கம் வலியுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இம் மாத இறுதிக்குள் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும். அதை செய்யத் தவறின், ஜனாதிபதி வரும் இடமெல்லாம் கறுப்புக்கொடி போராட்டத்தை நடத்துவோம் என முன்னாள் வடக்குமாகாண சபையின் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வேலன் சுவாமியை கைதுசெய்தமையைக் கண்டிப்பதோடு இவ்வாறெல்லாம் ஜனநாயக போராட்டங்களை அடக்க முடியாது. ஜனாதிபதி இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்

அவ்வாறு விடுதலை செய்யத் தவறின் ஜனாதிபதிக்கு எதிராக அனைத்து இடங்களிலும் கறுப்புக்கொடி போராட்டம் நடத்துவோம்.

அத்துடன் எங்களை எந்த சட்டத்தின் கீழும் கைதுசெய்யலாம் ,அதற்காக நாங்கள் அஞ்சப் போபவர்கள் அல்லர். எத்தகைய தடைகள் வந்தாலும், நாங்கள் அவற்றை தகர்த்து,எமது மக்களுக்காக எங்களுடைய ஜனநாயக ரீதியான போராட்டத்தை தொடர்ச்சியாக நாங்கள் நடத்துவோம். – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாவின் செயற்பாடுகளே நாட்டின் அழிவுக்கு காரணம்!

## பைசர் முஸ்தபா விளாசல்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காரணமாகவே நாட்டுக்கு தற்போதைய அழிவு ஏற்பட்டதாக முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஏற்படுத்திய அழிவுக்காக வரலாற்றில் ஜனாதிபதி ஒருவர் பதவியை கைவிட நேரிட்டது

கோட்டாபாய ராஜபக்ஷவின் செயற்பாடுகளேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. இப்படியான மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தியதன் காரணமாவே வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவருக்கு தனது பதவியை கைவிட நேரிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ செய்த பொருளாதார அழிவு காரணமாக எமக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல நேரிட்டது. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு முன்னதாகவே அவரிடம் கூறினார்கள்.

தலைக்கனம் காரணமாக அவர் செல்லவில்லை. தற்போதாவது சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக ஏதாவது ஒரு நிவாரணத்தைப் பெற வேண்டும்.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சஷவிடமும் தவறுகள் இருக்கின்றன. அவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவி வகித்த பின்னர் ஓய்வு பெற்றிருந்தால், மக்கள் தற்போதும் அவரை தெய்வத்தை போல் போற்றுவார்கள்.

காரணம் அவர் போரை முடிவுக்கு கொண்டு வந்த யுக நாயகன். இது எந்த விவாதங்களும் இன்றி நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம்.

அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்தமைக் கான முழுப் பொறுப்பையும் மஹிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும். அரசியலில் ஈடு பட்டவர் என்ற வகையில் தனது சகோதரரின் திறமை மற்றும் திறமையின்மையை அறியாமல் இருந்தது சிக்கலுக்குரியது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட முழு அழிவுக்கான பொறுப்பையும் மஹிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர், தனது சகோதரர்கள் கூறுவதை கேட்கவில்லை. எனக்கே எல்லாம் தெரியும் என்று அவர் செய்ததை அறிந்தவர்கள் அறிவார்கள்.

இதனால், நாம் எப்போதும் ஒரு நபரை சுற்றி ஒன்றிணையாது, கொள்கை ஒன்றுக்கு அமைய ஒன்றிணைய வேண்டும். தேர்தலில் வெற்றி பெற செய்ய வேண்டியது நபரை அல்ல, கொள்கையையே வெற்றி பெற செய்ய வேண்டும்.

அதேவேளை கோட்டாபய ராஜபக்ஷ காரணமாக யுத்தத்தில் வெற்றி கிடைக்கவில்லை. அவர் ஆட்சியில் இருக்கும் போது அவரது செயற்பாடுகளைப் பார்த்தால், போர் சம்பந்தமாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மிகப் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

அவர் இல்லை என்றால், யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது தனது நம்பிக்கை எனவும் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாவிகளுக்கான சீனாவின் திட்டத்தில் இலங்கையும் சேர்ப்பு

கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் பெரும் எண்ணிக்கையில் சீன சுற்றுலாப் பயணிகளை அனுப்பும் தனது முன்னோடித் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துள்ளது சீனா.

தாய்லாந்து, இந்தோனேஷியா, கம்போடியா, மாலைதீவு, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய 20 நாடுகளுக்கு, சீனர்கள் வெளிச்செல்லும் முன்னோடித் திட்டத்தை சீன கலாசார மற்றும் சுற்றுலா அமைச்சு அறிவித்துள்ளது. 3 வருடங்களின் பின்னர் வெளியாகிய இந்த அறிவிப்பில், இலங்கையும் இணைக் கப்பட்டுள்ளமை இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த உதவும் என சீனத் தூதரகம் தெரிவித்தது. மேலும், இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இது உதவும் என்றும் சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது.சீன கலாசாரம் மற்றும் சுற்றுலா அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2019 ஆம் ஆண்டில், 15 கேடியே 50 லட்சம் சீனர்கள் வெளிநாடுகளுக்குபயணங்களைமேற்கொண்டுள்ளனர்.



# பல்கலைக் கழகங்களின் பங்களிப்பு அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியம்!

## ஜனாதிபதி வலியுறுத்து

நூறாவது சுதந்திர தினத்தின்போது இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு பல்கலைக்கழக சமூகம் உள்ளிட்ட இளைஞர், யுவதிகளின் ஆகக்கூடிய பங்களிப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்திப் பணிகளின்போது பல்கலைக்கழக சமூகத்தின் பங்களிப்பு மிக அவசியம் என்றும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

75 ஆவது சுதந்திர தினத்துக்கு இணையாக தேசிய இளைஞர் தளத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

2048ஆம் ஆண்டாகும்போது சுபீட்சமானதும் பலம் மிக்கதுமான இலங்கையைக் கட்டியெழுப்பும் வேலைதிட்டத்தில் பங்குதாரர்களாவதற்கு இலங்கையின் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் 25 வருட கால அபிவிருத்தி வேலைதிட்டத்துக்கு இளைஞர் சமூகத்தைப் பொறுப்பு மிக்க பங்காளர்களாக இணைத்துக் கொள்ளுதல் என்பன தேசிய இளைஞர் தளத்தின் நோக்கங்களாகும்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களை இணைத்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள முக்கிய நகரங்களை சுற்றுலா நகரங்களாக மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்றும் இதன் கீழ் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது தொடர்பான முன்மொழிவுகளும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

அதற்கமைய, யாழ்.மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களும் அநுராதபுரம் மாவட்டம் தொடர்பான சுற்றுலா திட்டங்களை களனி மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகங்களும் கையளித்தன.

ருஹுனு பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து காலி மாவட்டத்தை மையமாகக் கொண்ட சுற்றுலா மேம்பாட்டு வேலைத்திட்டங்களையும் கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நுண்கலை பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து கொழும்பு மாவட்டத்துக்கான வேலைத் திட்டங்களையும் சமர்ப்பித்துள்ளன.

# ஈ.பி.டி.பி. யாழில் வேட்புமனு தாக்கல்!



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழில் வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்தில் வேட்புமனு தாக்கல் செய்திருந்தது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக வேட்புமனுகளை அவர்கள் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காதலன் கொலை; காதலி சிக்கினார்!

காலியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு இளைஞரை காலி, அஹங்கம – மிதிகமவுக்கு அழைத்த குறித்த பெண், அவரைக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கும் இடையே காதல் தொடர்பு காணப்பட்டது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மஹரகம பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில், சந்தேகநபரான பெண் 15 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

24 வயதான இளைஞர் கடந்த 11 ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் படத்தில் காணலாம்


# ஜெய்ஷங்கர் - மஹிந்த நேற்று விசேட சந்திப்பு!

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கருக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, இலங்கையின் இக்கட்டான காலங்களில் உதவிய இந்திய அரசாங்கத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

# பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கை இடைநிறுத்தம்!



பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் அச்சிடும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்த ஆண்டில் திட்டமிட்டவாறு பாடப் புத்தகங்களை விநியோகம்செய்யமுடியாதுஎனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக விலைமனுக்கோரல்மூலம்தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கான முற்பணம் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்பட்டதன் பின்னர் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் என்பன இதுவரையில் வழங்கப்படவில்லை.

பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு முற்பணமாக 20 வீத கொடுப்பனவு வழங்குவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கொடுப்பனவுகளை உரிய முறையில் வழங்கத் தவறியதால் அச்சு நிறுவனங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ரூபா 7 லட்சம் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

அநுராதபுரம்–ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேக நபரின் வீட்டில் இருந்து 16.1 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹொரவ்பொத்தானை – நெலுகொள்ளாவ பகுதியில் வசித்து வரும் கபில குமார் த சில்வா (வயது – 41) என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சந்தேகநபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் மீட்கப்பட்டது.

அத்துடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போதைப்பொருள்கள் பாவனையை எதிர்த்து விசுவமடுவில் போராட்டம்!

விசுவமடு பகுதியில் போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டம் வெள்ளிக்கிழமை விசுவமடு வர்த்தகர்களால் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி விசுவமடு பகுதியில் தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் போதைப் பொருளுக்கு அடிமையான கும்பல் ஒன்று வர்த்தக நிலையத்தில் சேதமாக்கப்பட்டமையை கண்டிக்கும் வகையிலும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என வலியுறுத்தியும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஜனாதிபதி மற்றும் பொலிஸ் திணைக்களத்தினருக்கும் மகஜர், ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்து.மேலும் இந்தப் போராட்டத்தில் வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# நுவரெலியாவில் நடந்தது என்ன?

## கோர விபத்தின் பின்னணி!

நுவரெலியா – நானுஓயா – ரதெல்ல பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று சிறார்கள் உட்பட ஏழு பேர் பரிதாபகரமாக பலியாகியுள்ளனர். பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 55 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் சிலருக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த சுற்றுலா பஸ் ஒன்று, வான் மற்றும் ஓட்டோவுடன் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வானில் பயணித்த அறுவரும், ஓட்டோ சாரதியும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

வானில் பயணித்த தந்தை, தாய், இரு பிள்ளைகள், உறவினர் ஒருவர் மற்றும் சாரதி ஆகியோரே பலியாகினர்.

வானில் பயணித்தவர்கள் ஹட்டன், டிக்கோயா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், ஓட்டோ சாரதி நானுஓயா பகுதியைச் சேர்ந்தவர் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் விபரம்:–

01. அப்துல் ரஹீம் (வயது 55)
02. ஆயிஷா பாத்திமா (வயது 45)
03. மரியம் (வயது 13)
04. நபீஹா (வயது 08)
05. ரஹீம் (வயது 14)
06. வான் சாரதி நேசராஜ் பிள்ளை (வயது 25)
07. ஓட்டோ சாரதி எஸ். சண்முகராஜ் (வயது 25)

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் இருந்து நுவரெலியாவுக்கு கல்விச் சுற்றுலா சென்ற மாணவர்களை ஏற்றி வந்த பஸ், மீண்டும் கொழும்பு நோக்கி நேற்றிரவு பயணித்துக்கொண்டிருந்தது.

இந்நிலையில் அதிக வேகம் காரணமாகவும், 'பிரேக்' செயற்படாததாலும் நானுஓயா – ரதெல்ல பகுதியில் வைத்து வான் மற்றும் ஓட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அத்துடன் பஸ் சுமார் 50 அடிவரை பள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டது. வானும், ஓட்டோவும் கடுமையாகச் சேதமடைந்தன. இந்த விபத்தையடுத்து பிரதேச மக்களும், பாதுகாப்புப் பிரிவினரும் இணைந்து பாதிக் கப்பட்டவர்களை மீட்டு நுவரெலியா வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் நுவரெலியா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. இன்று பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சலங்கள் கையளிக்கப்படும்.



காயமடைந்த மாணவர்களில் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோரை ஹெலிலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இடம்பெற்று வருகின்றன.

விபத்தையடுத்து நானுஓயா குறுக்கு வீதி மூடப்பட்டுள்ளது. எனவே, சுற்றுப்பாதையை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

'வெளியிடங்களில் இருந்து வரும் சாரதிகள் நானுஓயா குறுக்கு வீதியைப் பயன்படுத்துவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. அவர்களுக்கு அந்த வீதியின் தன்மை புரிவதில்லை. எனவே, சுற்றுப்பாதையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்' – என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து நேற்றிரவே வைத்தியசாலைக்குச் சென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். அத்துடன், நானுஓயா குறுக்கு வீதியை மூடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.



# யோகக்கலை புதிய பிரிவு விரைவில்

வடக்குமாகாணக்கல்விஅமைச்சின்இளைஞர்விவகாரஅலகினால் உடல்,உளமேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை கற்கைநெறி யின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில்அமைந்துள்ளநல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் விரைவில் தொடங்கவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர் வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை முழுமையாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டசான்றிதழ்கள்வழங்கப்படும்.

பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப் பப்படிவங்களை பெற்று 06.02.2023 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வாறு கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவேண்டும். மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அரச வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.




ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்றுவரும் செல்வாக்குமிக்க பெண்களின் முதலாவது பன்னாட்டு மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவியும் நாட்டின் முன்னாள் முதல் பெண்மணியுமான ஷிராந்தி ராஜபக்சவும் விசேட பிரதிநிதியாகக் கலந்துகொண்டுள்ளார்.

# நெருக்கடிக்குத் தீர்வு வழங்காத இந்த அரசுக்கு வாக்களிக்காதீர்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

பொருளாதார நெருக்கடி உட்பட நாட் டில் நிலவும் நெருக்கடிகளுக்கு சரியான தீர்வை முன்வைக்க முடியாது போன எவருக்கும் மக்கள் வாக்களிக்கக்கூடாது என சிங்கள தேசியவாத அமைப்பான தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத் துவதால் அரசாங்கத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஆனால், அரசு தனது பொறுப்பை நிறைவேற்றவில்லை என்பதற்கான எதிர்ப் பைக் காட்டும் வகையில் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

நிலவும்நெருக்கடிகளுக்குத்தீர்வை காண்பதற்கு பதிலாக எதிர்க்கட்சி கள் தேர்தலைக் கோருகின்றன. அரசாங்கத்திடம் நெருக்கடிகளைத் தீர்க்க வழிமுறை ரீதியான திட்டங்கள் இல்லை என்பதுதொடர்பாகஎதிர்க்கட்சிகள்கூடப் பேசுவதில்லை. எவ்வாறாயினும் பொருளாதாரநெருக்கடியால்பெரிதும் கஷ்டங்களை அனுபவித்து வரும் மக்கள் அந்த நெருக்கடிக்கான தீர்வையே எதிர்பார்க் கின்றனர் என்பதை அரசாங்கம் மறக்கக் கூடாது. நெருக்கடிகளுக்கு குறுகிய தீர்வைத் தேடுவது காலத்தை வீணடிக்கும் அநியாயம் எனவும் வசந்த பண்டார கூறியுள்ளார்.

# சைவப் புலவர் பட்டம் பெறுகின்றனர் 15 பேர்

## நாளை பட்டமளிப்பு விழா

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தினால் 2021, 2022 காலப் பகுதியில் நடத் தப்பட்ட சைவப் புலவர் சங்கத் தேர்வில் சித்தி யடைந்த 15 பேருக்கான பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

2021ஆம் ஆண்டு வே.மகேசரெத்தி னம், திருமதி வி.இராமச்சந்திரா, திருமதி. இ.ஞானரெத்தினம்,திருமதி ஶ்ரீ.பத்மலோ ஜினி மற்றும் இ.ஜெயந்திரன் ஆகியோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். 2022 ஆம் ஆண்டு திருமதி செ.உதயகௌரி, திருமதி சு.இரத்தினேஸ்வரி, பொ.கனகரத்தினம், திருமதி இ.புவனராணி, து.பிரபாசன், திருமதி வ.மகிபா, திருமதி வே.சுந்தரமதி, சா.நவீந்திரதாஸ், ம.விமலகாந்தன், திருமதி சி.மல்லிகா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இடம்பெறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைர விழா நிகழ்வில் சைவப் புலவர் பட்டம் வழங் கப்படும் என சங்கத்தின் தலைவர் சி.கா. கமலநாதன் தெரிவித்தார்.

இவர்களுடன் 2021மற்றும் 2022 ஆம் ஆண்டு சைவப்புலவர் சங்கத் தேர்வு களின் அடிப்படையில் 28 பேர் இளஞ் சைவப் புலவர் பட்டம் பெறவும் தகுதி பெற் றுள்ளனர். இவர்களுக்கும் நாளைய தினம் இளஞ் சைவப் புலவர் பட்டம் வழங்கப் படவுள்ளது.

# தனிப்பட்ட லாபங்களுக்காக பிரிந்து சின்னாபின்னமாகிய தமிழ் கட்சிகள்

மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கப்போகின்றோம், அரசியல் அதிகாரங்களை பெற்றுக் கொடுக்கப் போகின்றோம் என்று சொல்லுகின்ற தமிழ் கட்சிகள், இன்று சின்னாபின்னமாகி தங்களுடைய சொந்த லாபங்களுக்காக பிரிந்து செயல்படுகின் றமை கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்தார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தின் திட்டமிடல் பணிப்பாளர்.

தேசியமீனவஒத்துழைப்புஇயக்கத்தின் கிழக்கு மாகாண பெண்கள் சம்மேளனக் கூட்டம் மட்டக்களப்பு பல நோக்கு கூட்டு றவுச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்டமிடல்பணிப்பாளர் ஏ.ஜேசுதாஸ்தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்களுடைய நேர்மையற்ற ஆட்சி முறையும், அடக்கு முறையும் மிகவும் மோசமான பாதிப்பை மக்களுக்கு ஏற்ப டுத்தி உள்ளன. சமூக பொருளாதார அரசியல் ரீதியாக இன்று இலங்கை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.பின்கதவால் நாடாளுமன்றத்திலுள்ள தங்களுக்கு ஆதரவானவர்களுடைய வாக் குகளை வைத்து ஜனாதிபதியானவர் இன்று அடக்கு முறையை அவிழ்த்து விட்டுள்ளார்.

தென்னிலங்கையில் நடக்கின்ற போராட்டங்களாக இருக்கலாம் வடக்கில் நடக்கின்ற போராட்டங்களாக இருக்கலாம், நீரை , கண்ணீர் புகையைப் பயன்படுத்தி மக்களுடைய ஜனநாயக உரிமையை தொடர்ந்து மறுக்கிறார்கள்.

வசந்த முதலிகே இந்த நாட்டினுடைய உரிமைக்காக போராடிய ஒரு சகோதரர், அவரை கைது செய்து 150 நாள்களுக்கு மேலாக தடுத்து வைத்துள்ளார்கள். சிறுபான்மையினத்தவரைக்கட்டுப்படுத்தக்கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்று சிங்கள மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது. கைது செய்வது, போராட்டக்காரர்களை அடக்குவது ஏற்கமுடியாத பாராதூரமான விடயம். தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக் கம் என்ற வகையிலும் சிவில் அமைப்பு என்ற வகையிலும் அரசு உடனடியாக விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் தீர்வை வழங்க வேண்டும் எனக்கேட்கின்றோம் – என்றார்.

# 80 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்.தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட கட்டுவன் பகுதியில் 80 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபரொருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.இந்த கைது நடவடிக்கை வெள்ளிக் கிழஷ் முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பின் போது 28 வயது டைய சந்தேகநபரொருவரே கைது செய் யப்பட்டுள்ளார். இந்த கைது நடவடிக்கையின் போது கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர், சான்றுப் பொருள்களுடன் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.இதற்கமைய சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முட்டை தட்டுப்பாட்டுக்கு ஜூன் மாதம் முடிவு வரும்

முட்டை தட்டுப்பாடு ஜூன் மாதத்துக்குள் முடிவுக்கு வரும் என்று வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் பிரியங்கா அத்தபத்து தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது நாளாந்தம் 30 கோடி முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, முட்டை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் 32 ரூபா 50 சதத்துக்கு இறக்குமதி செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீசாலையில் சிக்கியது கஞ்சா

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மஹேந்திரா பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சாவைக் கொண்டு சென்றபோது வாகனத்தை இடைமறித்து கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் வாகனச் சாரதியையும் கைது செய்தனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலிதவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் டார்வின் தலைமையிலான குழுவினர் கஞ்சாவைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் நிறை 352.25 கிராம். பிக்கப் ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்டவர்கள் தாக்கல் செய்தனர்.




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.



ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ் தலைமையிலான குழு தாக்கல் செய்தது.



அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வேட்புமனு தீபன் திலீசனால் யாழ்ப்பாணத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுவை ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் தாக்கல் செய்தனர்.




தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக் கானவேட்புமனுவை சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான குழுவினர் தாக்கல் செய்தது.




ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்புமனு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்யப்பட்டது.




யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை நகர சபையில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை சமத்துவ கட்சி சார்பில் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் துலேஜனா முகுந்தன் தாக்கல் செய்தார்.



புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் வேட்புமனு சி.கா.செந்திவேலால் யாழ்ப்பாணத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.



யாழ்ப்பாண மாநகர சபையில் போட்டியிடுவதற்காக தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரன் தலைமையிலான சுயேச்சை குழுவினர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.



ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்புமனு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் யாழ்ப்பாணத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.



நல்லூர் பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார்.